**27 அங்கம் வெட்டின படலம்**

குலோத்துங்கன் ஆட்சி காலத்தில் ,சோமசுந்தர கடவுளின் பக்தன் ஒருவன், வாட்போர் விந்தையில் சிறந்தவனாய் பல இளைஞர்களுக்கு பயிற்றுவித்து அவர்களுக்கு குருவாய் இருந்து வந்தான் இவனிடம் பயின்ற சத்தன் என்பவன் தனியாகவே பலருக்கு வாட்போர் கற்பித்து வந்தான்.

பல பேர் அவனை மதித்ததாலும் தன் குருவை விட அதிக வருவாய் ஈட்டியமையால் கர்வம் கொண்டான். மேலும் அவருக்கு பலவகையில் இன்னல்கள் செய்தான். அத்தோடு நில்லாமல் ஒரு சமயம் குரு வெளியூர் சென்றிருந்த சமயம், அவரின் மனைவியை இடன் உண்டோ என்று கேட்டு கையை பிடித்து இழுத்தான். கற்பில் சிறந்த அம்மாது, அவனை வெளியே தள்ளி தாளிட்டு, இதனை கணவனிடம் கூடக்கூறாமல் கூடல்பிரானிடம் தன் குறையை கூறி அழுதான்.

நீச்சனாகிய சித்தன் செய்த செய்கையை அறிந்த சுந்தரர், சித்தனை தண்டிக்க எண்ணம் கொண்டு குருவினைப் போல் வேடம் தரித்து சித்தனிடம், இருவரின் வலிமையும் மறுநாள் போரிட்டு அறியலாம் என்று அழைத்தார். இதற்கு உடன்பட்ட சித்தனும், குருவேடம் தரித்த ஈசனிடம் கடும் போரிட்டான். குருவின் பத்தினியை விரும்பின உள்ளத்தையும், தகாது பேசின் நாவையும், தொட்ட கையையும், அங்கம் அங்கமாக வெட்டியபின் தலையையும் வீழ்த்தி மறைந்தார் ஐயன்.

அவருடைய மாணவர்கள் குருவை அவர் வீட்டில் தேடினர். எல்லா இடங்களிலும் தேடி குருவைக் காணவில்லை. கோயிலுக்குச் சென்ற அவர்கள் குருவை அங்கு கண்டார்கள். சித்தனைக் கொன்றபின் அவர் எங்கு சென்றார் என்று அவரிடம் வினவ, குரு தான் சித்தனைக் கொல்லவில்லை எனவும், இது சோமசுந்தர கடவுளின் செயலாக இருக்கலாம் என்றார். அப்போது குருவின் மனைவி சித்தன் தன்னிடம் இடம் உண்டோ என்று கேட்ட விவரம் கூறினாள். அங்கு இருந்தோரும் வாள்வீரர் சித்தனை கொல்லும் பொழுது, இதனைச் சொல்லியே கொன்றதாக கூறினர். குரு இதனை ஐயனின் திருவிளையாடல் எனக் கூறிது தித்தார்.

இதனை அறிந்த குலோதுங்க பாண்டியன் ஐயனின் அருளை எண்ணி உருகி, குழுவிற்கும் அவர் மனைவிக்கும் மாணிக்க மாலை அணிவித்து, யானையில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றார். சில காலம் சென்ற குலோத்துங்கன் பின் தன் மகன் அனந்த குணபாண்டியனுக்கு, முடிசூட்டி பின் சிவபதமடைந்தான்

**பல்லவி**

வித்தை கற்ற குருவின் பத்மினியை சித்தன்
இடன் உண்டோ எனக் கேட்டு கையைப் பிடித் திழுத்தான்

**அனுபல்லவி**

சித்தத்தில் உன்னையே நினைத்தவனைக் காக்க
சீடன் முன் குருவேடத்தில் மல்யுத்தத்திற்கு அழைத்தீர்

**சரணம்**

சித்தனை வென்றது தானில்லை யென்றும்
சிவன் செயல் என குரு பார்த்தவரிடம் சொல்ல
பத்தினியும் இடன் உண்டோ என்ற பாவியின் சொல்லைச் சொல்ல
அதனைச் சொல்லியே அவனைக் கொன்றதாகச் சொல்லினர்